## துருசவிய நிதியம் - 2017

துருசவிய நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2000 இன் 23 ஆம் இலக்க துருசவிய நிதிய அதிகாரச்சட்டத்தின் 21(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2 நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான துருசவிய நிதியத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் 48 ஆம் பந்தியின் பிரகாரம் தேவைப்படுகின்ற அல்லது அனுமதியளிக்கப்படுகின்ற சந்தர்ப்பங்களைத் தவிர்த்து சொத்துக்களும் பொறுப்புக்களும் மற்றும் வருமானங்களும் செலவுகளும் ஒன்றுக்கொன்று எதிரீடு செய்யலாகாது என்ற போதிலும் இறப்பர் பால் வெட்டுபவர்களைப் பயிற்றுவிக்கும் செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சிடமிருந்து நிதியத்திற்கு கிடைத்த ரூபா 3,996,000 தொகையில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 3,532,078 செலவு எதிரீடு செய்யப்பட்டு மிகுதி நடைமுறைப் பொறுப்பின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

#### 2.2.2 பெற வேண்டிய கணக்குகள்

05 ஆண்டுகளுக்கும் 15 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாக முன் கொண்டுவரப்படுகின்ற ரூபா 865,189 கூட்டுமொத்தமான 41 கடன் மீதிகள் 2018 மார்ச் மாதம் வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | 2000 இன் 23 ஆம் இலக்க துருசவிய நிதிய அதிகாரச் சட்டத்தின் 32.3 ஆம் பிரிவு | நிதியம் தோற்றுவிக்கப்பட்டு 16 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தும் இந்த அதிகாரச் சட்டத்திலுள்ள அறிவுறுத்தல்கள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்கல்களின் பிரகாரம் கணனித் துணைக் கருவிகளுக்காக பதிவேடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | 2003 ஒக்தோபர் 28 ஆந்திகதிய பீஈடீ/17 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கை | உள்நாட்டு நிதியங்களைப் பயன்படுத்தி வெளிநாட்டுப் பயணங்களுக்காக பங்குபற்றுவதற்கு முன்னர் பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் ரூபா 794,400 செலவு செய்து நிதியத்தின் தலைவர் முன்னைய ஆண்டின் போது இந்தியாவில் நடைபெற்ற கருத்தரங்கில் பங்குபற்றுவதற்காக அங்கீகாரத்தை பெற்றிருக்கவில்லை. |
| (ஈ) | 2000 சனவரி 11 ஆந் திகதிய பீஎவ்/பீஈ5 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கை | திறைசேரியின் அங்கீகாரமின்றி நிதியத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தின் அறிக்கைகளைத் தயாரிப்பதற்காக நிறுவனத்தின் ஒரு உத்தியோகத்தருக்கு ஒரு கூட்டத்திற்கு ரூபா 6000 ஆக 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்காக ரூபா 84,000 மொத்த தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (உ) | 2008 மார்ச் 03 ஆந் திகதிய 1/2008 ஆம் இலக்க திறைசேரி செயற்பாடுகள் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | (i) அரசாங்கத்தால் நேரடியாக மற்றும் மறைமுகமாக நிதி வழங்கும் நிறுவனம் மற்றும் அரசாங்கத்திற்கு நேரடியாக மற்றும் மறைமுகமாக இறுதிப் பொறுப்புக்களை ஒப்படைக்கும் நிதியங்களின் செயற்திறன் சம்பந்தமாக தேசிய பொருளாதாரத்திற்கு மிகவும் சிறந்த பெறுபேறுகளை வழங்குகின்ற முறையான முதலீட்டு நடைமுறை பின்பற்றப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது ரூபா 1 மில்லியனுக்கும் ரூபா 7 மில்லியனுக்கும் இடைப்பட்ட வீச்சுடைய மீதிகள் விளைவற்று வங்கி நடைமுறைக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.<br><br>(ii) அரசாங்க வங்கிகளில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் முதிர்வடையும் போது இலங்கை மத்திய வங்கி மற்றும் திறைசேரியினால் மத்திய கால முதலீடுகளுக்காக செலுத்தப்படுகின்ற வட்டிவீதத்திற்கு உட்பட்டு இரண்டு ஆண்டுகளுக்கு அல்லது அதற்கு மேற்பட்ட காலப்பகுதிகளுக்காக வங்கி வைப்புக்களில் அல்லது திறைசேரி உண்டியல்களில் மீண்டும் முதலீடு செய்யப்பட வேண்டிய போதிலும் நிதியத்தின் ரூபா 6,193,862 தொகையான முதலீடானது 2017 சனவரி 02 ஆந் திகதியிலிருந்து 06 மாத கால குறுங்காலத்திற்கு முதலீடு செய்யப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக நிதியத்தின் செயற்பாடுகளிலிருந்து ரூபா 439,484 பற்றாக்குறை காணப்பட்டதுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 484,646 ஆக இருந்ததனால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் ரூபா 924,130 பாதக நிலைமை சுட்டிக்காட்டப்பட்டிருந்ததுடன்

அதற்கு பணிக்கொடைக்கான ஒதுக்கீடு முன்னைய ஆண்டை விட ரூபா 2,027,165 அதிகரித்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 03 ஆண்டுகளின் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது மீளாய்வாண்டில் மற்றும் 2015 ஆம் ஆண்டில் நிதிப் பற்றாக்குறை அவதானிக்கப்பட்டதுடன் 2014 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் நிதி மிகை காணப்பட்டது. எவ்வாறாயினும் நிதி விளைவுகளுக்கு ஊழியர் பணிக்கொடை, நடைமுறையற்ற சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை மீண்டும் செம்மையாக்கும் போது 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 13,988,922 தொகையான பங்களிப்பு 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 17,171,167 வரை முன்னேற்றமடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 செயற்திறனும் மீளாய்வும்

மீளாய்வாண்டின் போது நிதியத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியத்தின் குறிக்கோளாகிய இறப்பர் கைத்தொழில் சார்ந்த முதலீட்டை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சிறிய இறப்பர் தோட்ட உரிமையாளர்களின் சமூக மற்றும் பொருளாதார நிலைமையை மேம்படுத்தும் குறிக்கோளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 14 மாவட்டங்களில் 172 துருசவிய சங்கங்கள் பதிவுசெய்யப்பட்டிருந்த போதிலும் 329 சங்கங்கள் செயற்பாடற்றுக் காணப்பட்டன. அச்சங்கங்களை செயற்படும் நிலைமைக்கு கொண்டுவருவதற்கு அல்லது பதிவை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவச் செயற்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) 2016 பெப்ரவரி 12 ஆந் திகதிய 02/2016 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாது நிதியத்தால் 2002 மற்றும் 2005 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட தராசுக் கடன் மற்றும் டயமன்ட் ரோல் ஜோடு கடன்கள் தொடர்பாக பெறவேண்டிய ரூபா 41,607 தொகை பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2002 ஆம் ஆண்டின் போது ஐந்து உத்தியோகத்தர்களுக்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்ட ரூபா 259,949 தொகையில் மீளாய்வாண்டின் போது ரூபா 194,438 சம்பளங்களிலிருந்து மீள அறவிடப்பட்டிருந்தும் அப்பணத்தை திறைசேரிக்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது நிதியத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

| **முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள்** | | **அவதானிப்பு** |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | அங்கத்தவர் கட்டணப் பதிவேடு பேணப்பட்டிருக்காமை |
| (ஆ) | நிதிக் கட்டுப்பாடு | கடன் மீதிகளைப் பதிவழிப்பதற்கு முறையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமையும் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமையும் |
| (இ) | அங்கத்தவர்களுக்கு உதவி வழங்குதல் | உதவி வழங்குவதற்கு அங்கத்தவர்களைத் தெரிவு செய்யும் நடைமுறை தயாரிக்கப்பட்டிருக்காமை மற்றும் அங்கத்தவர்களுக்கு வழங்கப்படுகின்ற உதவி தொடர்பாக ஒரு தரவு முறைமையைப் பேணாமை. |